நிறைவேற்றப்படும்போது அந்த திட்டம் அந்தப்பகுதி மக்களுக்கு எவ்வளவு பெரியதொரு வரப்பிரசாதம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணருவார்கள். ஆரம்ப வேலைகளை விரைவில் முடிக்க அரசு உத்தரவிடும்.

திரு. எம். பிச்சை: அருப்புக்கோட்டைத் தொகுதியில் உள்ள கம்பிக்குடி கண்மாயை 'கண்மாய்களை' நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் கொண்டு வருவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளதற்கு அருப்புக்கோட்டை தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்? மதுரை மாவட்டம் நிலையூர் கூத்தியார்குண்டு கண்மாய் வழியாக, வைகையில் நீர் நிரம்பி வழியும் போது மறுகால் மூலம் கூத்தியார்குண்டு கண்மாய் நிறைந்து வரும் தண்ணீரை கம்பிக்குடி கண்மாய்க்கு, உலகாணி கால்வாயை ஆழப்படுத்தி கம்பிகுடி கண்மாய்க்கு தண்ணீர் கொடுக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: இந்த முன்னோடித் திட்டத்தை விரைவில் முடித்துக்கொண்டு கூடுமான வரையில் உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல உபரித் தண்ணீரைத் கம்பிக்குடி கண்மாய்க்கு வரும் வகையில்தான் குறிப்புகள் இருக்கின்றன. முன்னோடித் திட்டத்தின் அறிக்கை வந்த பிறகுதான் அதுகுறித்த விரிவான தகவல்களைத் தர முடியும்.

திரு செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் மூலமாக 5 0 ஏக்கர், அதற்கு மேற்பட்ட நீர்ப்பாசன கண்மாய்களை எடுத்துக்கொண்டு வேலைசெய்வதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இன்றைக்கு 2,000, 3,000 7,000 ஏக்கர்கள் நீர்ப்பாசன வசதி பெறும் கண்மாய்கள் எல்லாம் விடப்பட்டிருக்கின்றன. எப்படி இந்தக் கண்மாய்களை செலக்ஷன் செய்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்திலே 8 இடங்களிலே இந்தக் கண்மாய்களை முன்னோடித் திட்டத்தின்கீழ் நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்தக் கண்மாய்களின் வேலையை முன்னோடித் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்டு, அதிலே ஏற்படக்கூடிய அனுபவத்தைப் பெற்று, மேற்கொண்டு இந்தத் திட்டத்தைத் தயாரிக்க எவ்வளவுதூரம் இந்த முன்னோடித் திட்டம் உதவுகிறது என்பதைப் பார்த்து, அதன்பின் பிற கண்மாய்களை எடுத்துக்கொள்வது என்பது அரசின் நிலை.

பாசன மேம்பாட்டுத் திட்டங்கள்—

குறுகிய கால வினா எண். 2—. திரு பி. ஈவரஸ்மூர்த்தி என்கிற சொர்ணம் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

1981 ஆகஸ்டு 31]

(அ) பலகோடி ரூபாய்செலவில் தாரபரணி, மணிமுத்தாறு, கோதையாறு, லோயர் கோதையாறு, கல்லணைஆகிய பாசன மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்த தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

(இ) எப்பொழுது திட்டங்கள் செயல்படத் துவங்கும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது (அ), (ஆ) மற்றும்

(இ) கோதையாறு பாசனத்தின் கீழ் வருகின்ற திருப்பரப்பு அணைக்கட்டு வலதுபுறக் கால்வாய் விரிவாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. மற்றும் அனந்தனார் கால்வாய் மேம் பாட்டுத்திட்ட வேலைகள் தொடங்கவிருக்கின்றன. ஏனைய திட்டங்கள் தலைமைப் பொறியாளர்களின் ஆய்வில் உள்ளன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல் தாமிரபரணித் திட்டமும், மணிமுத் தாறுத் திட்டமும், கல்லணைத் திட்டமும் இருக்கின்றன. அவைகள் எந்த நிலையில் இருக்கின்றன. அவைகளிலே எப்போது வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி பாசன அமைப்பை நவீனப்படுத்த வேண்டுமென்று அங்குள்ள விவசாயிகளும், சட்ட மன்ற உறுப்பினர்களும், மாவட்ட ஆட்சித் தலைவரும் அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர். அந்த பாசன அமைப்புகளை நவீனப்படுத்துவதென அரசு கொள்கை அளவில் ஒப்புக்கொண்டது முதல் நிலை. இரண்டாவதாக, மேற்படி பாசன அமைப்பில கடைக்கோடி பகுதியை முதலிலே எடுத்துக் கொள்வதென்று சொல்லி,. அந்த வேலைகளைத் துவங்குவதற்கு ஆய்வு வேலை இப்போது நடந்துகொண்டிருக்கிறது, மொத்தமாக தாமிரபரணி பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துவதற்கு 20 கோடி ரூபா யாகும்; அதேபோல் மணிமுத்தாறு பாசனத் திட்டத்தை நவீனப் படுத்துவதற்கு 3 கோடி ரூபாயாகும். ஆக இந்தத் தாமிரபரணி மணிமுத்தாறு பாசனத் திட்டங்களுக்கு 23 கோடி ரூபாய் செலவாகும் என்று ஓர் மதிப்பீடு தரப்பட்டிருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தாமிரபரணி பாசனத்திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கின்ற வடக்கு கோடைமேலழகியன் கால்வாய் பகுதிக்கு எவ்வளவு தொகையாகும்? அதேபோல் தெற்கு கோடைமேலழகியன் கால்வாய் பகுதிக்கு எவ்வளவு தொகை யாகும்? அதேபோல் நதி தண்ணிர் கால்வாய் திட்டத்திற்கு எவ்வளவு தொகையாகும் என்பதோடு, இந்த வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே தாமிரபரணி, மணிமுத்தாறு ஆகிய இரண்டு பாசனத் திட்டங்

[1981 ஆகஸ்டு 31

ஒளுக்கும் எவ்வளவு தொகை செலவாகும் என்ற தோராய மதிப்பீடு தரப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது ஆரம்பக் கட்டத்தில் அதன் கடைக்கோடிப் பகுதியில் வேலை செய்ய வேண்டுமென்று, ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. அந்த ஆய்வு அறிக்கை கிடைத்ததற்குப் பிறகு, அந்த திட்ட மதிப்பீடுகளைப் பற்றிச் சொல்ல முடியும்.

முதுகுளத்தூர் தொகுதியை நிரந்தர வறட்சிப் பகுதியாக அறிவிக்கும் திட்டம்

*வினா எண். 103 திரு. கே. தனுக்கோடித் தேவர்:— மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முதுகுளத்தூர் தொகுதியை நிரந்தர வறட்சிப் பகுதியாக அறிவித்து நிவாரணப் பணிகள் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இராமநாதபுரம் மாவட்டம், ஏற்கனவே மத்திய மாநில அரசுகளின் வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் (Drought Prone Area Programme) சேர்க்கப்பட்டுள்ளது. தற்போது நிலவும் வறட்சியின் காரணமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேவையான நிவாரணப் பணிகளை அரசு செய்து வருகிறது.

திரு. கே. தனுக்கோடித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நான் கேட்டிருக்கிற கேள்வி, முகவை மாவட்டம், முதுகுளத்தூர் தொகுதியைப் பற்றியதாகும். ஆனால் அமைச்சர் அவர்கள் மொத்த மாவட்டத்தைப் பற்றித் தெரிவித்திருக்கிறார்கள். முகவை மாவட்டத்தில் முதுகுளத்தூர் தொகுதியும், கடலாடித் தொகுதியும் மிக மிகப் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. எனவே அவைகளை மற்ற தொகுதிகளோடு ஒப்பிடாமல், நிரந்தரமான தொழில் துறைகளை, மற்றும் ஆலைகள் போன்றவற்றை அங்கே ஏற்படுத்தி, அங்குள்ள மக்கள் இயற்கையையே நம்பிக் கொண்டிராமல், நிரந்தரமான ஒரு வாழ்க்கையை அந்த வறட்சிப் பகுதிகளிலே ஏற்படுத்தித் தரவேண்டும். அதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.20]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: முதுகுளத்தூரும் இராமநாதபுரம் மாவட்டத்திலேதான் இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டம் பூராவும் வறட்சிப் பகுதிகளாக எடுத்துக் கொள்ளும் போது முதுகுளத்தூரும் அதிலே வந்துவிடும்.

திரு. கே. தனுக்கோடித்தேவர்: இன்றைக்கு மற்றத் தொகுதிகளில் நீர் வளம் இருக்கிறது, தொழில் வளம் இருக்கிறது. முதுகுளத்தூர் தொகுதியில் நீர் வளம் இல்லை. தொழில் வளம் இல்லை. அங்கு வாழ்கின்ற மக்கள் இயற்கையை நம்பி வாழ்கிற காரணத்தால் அதற்கு விதிவிலக்கு அளித்து வளர்ச்சித் திட்டங்களைச் செய்ய அரசு முன்வருமா?